# நர சந்திரபாபு நாயுடுவுக்கு ஓர் ‘அரைகுறை’ பாமரனின் பகிரங்கக் கடிதம்!

# நாயுடுகாரு, மீக்கு ‘தொருக்குனா இட்வன்டி சேவா!’ 2

நேற்றையத் தொடர்ச்சி…

இன்னொரு விஷயத்தை நாயுடு அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். நாங்கள் தி.மு.க.வினர் திராவிட நாடு பரப்புரையை 1950களில் மிகக் கடுமையாகப் பரப்புரை செய்து கொண்டிருந்தோம். அப்போது, தினத்தந்தி நாளேட்டின் நிறுவனரும் நாம் - தமிழர் இயக்கத்தின் தலைவராக இருந்த சி.பா.ஆதித்தனார் சுதந்திர தமிழ்நாடு கேட்டு வந்தார். அப்போது அவர் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு கருத்தை எடுத்துச் சொல்லிக் கொண்டு இருந்தார். அதற்காகப் பரிசையும் நாட்டு மக்களுக்கு வழங்கினார். குடும்பக் கட்டுப்பாட்டுக்கு எதிரானது அது. அதிக பிள்ளைகளை பெற்ற குடும்பத்தினருக்குப் பெற்றோர்க்கு எங்கள் குடும்பம் பெரிசு அந்தக் குடும்பத்தின் ஒளிப் படத்தினைத் தினத்தந்தியில் வெளியிட்டு அவர்களுக்குப் பரிசும் தந்தார்.

சி.பா. ஆதித்தனாரை, ‘ஏன் இப்படி செய்கிறீர்கள்?’ என்று கேட்டார்கள். அவர் சொன்னார், ‘நாம் - தமிழ்நாட்டு மக்கள் குடும்பக் கட்டுப்பாட்டை அமல்படுத்தினால் பிறகு தமிழ்நாட்டின் மக்கள் தொகை குறைந்துவிடும். இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறையும்’ என்றார். நாயுடு அவர்களே ஆதித்தனார் சொன்னது தான் நடந்தது. அரசுக் கொள்கையை நடைமுறைப்படுத்தி நாம் பாதிப்புக்கு ஆளாகிறோம். அதனை நடைமுறைப்படுத்தாத மாநிலங்கள் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெறுகிறார்கள். இது எப்படி சரியாகும்? ஆகவே நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு மசோதா வைத் தோற்கடித்தோம். இது எப்படித் தவறாகும்?

நீங்கள், வலதுசாரி இரட்டையர்கள் மோடியும் - அமித்ஷாவும் 50% நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தித் தருவதாகச் சொல்லி இருக்கிறார்களே, அவர்கள் செய்வார்கள் என்று சொல்கிறீர்கள். எப்போது அதனை அவர்கள் சொல்கிறார்கள். மசோதா விவாதத்தின் போது சொல்கிறார்கள். 50% சேர்த்து தருகிறோம், அனைத்து மாநிலங்களுக்கும் இதனைத் தருகிறோம். ஒரு மணி நேரம் தாருங்கள், மசோதாவில் இணைத்து அந்த அதிகரிப்பைத் தருகிறோம் என்கிறார்கள். **இதை உயர்த்தி தென்னிந்தியர்க்கு பங்களிப்பை வழங்குவதை விட 25 ஆண்டுகளுக்கு 543 உறுப்பினர்களே இருந்துவிட்டு போகட்டும். என்கிறார் - எங்கள் தலைவர் ஸ்டாலின். இப்போ உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். இப்போது உள்ளவர்களுக்கே பேசுவதற்கு மக்களவையில் நேரம் கிடைப்பதில்லை.மக்களவையில் உறுப்பினர்களை 800க்கு மேல் ஆக்கினால் அனைவருக்கும் பேச வாய்ப்பு எப்படி கிடைக்கும்?**

தி.மு.க. மகளிருக்கு எதுவும் செய்யவில்லை, என்ன சாதனை செய்துவிட்டீர்கள் - நாட்டின் மதிப்பையும் மகளிரின் மதிப்பையும் குலைத்து விட்டதாகவும், சொல்கிறீர்கள். நாயுடுகாரு இப்படி ஆகிவிட்டாரே, மூன்றாந்தர பிரச்சாரகர் ஆகிவிட்டாரே, என்று நான் பெரிதும் வருந்தினேன். இதுவன்றி இன்னொரு குண்டைத் தூக்கிப் போட்டு இருக்கிறீர்கள். அது என்னவென்றால் மகளிர் இட ஒதுக்கீடு, தொகுதி மறு சீரமைப்பு செய்யாமல் போனால் ஆண்கள் பாதிக்கப்படுவீர்கள் என்று கூறுகிறீர்கள். அது எப்படி என்று நீங்கள் விளக்கவில்லை.


பல்லாயிரம் கோடி ரூபாய்களை மோடி அரசிடமிருந்து பெறுங்கள், ஆந்திராவை மேலும் செழுமைப்படுத்துங்கள். புதிய தலைநகரமாக அமராவதியைக் கட்டமையுங்கள். தி.மு.க.வைக் குறைச் சொன்னால் உதவிகள் கிடைக்கும் என்றால் அதனை மேலும் செய்யுங்கள், உங்களை நாட்டு மக்கள் நன்றாகத் தெரிந்து கொள்ள அது உதவட்டும், ஆனால் நீங்கள் தவறான அணியில் இருப்பதை நாட்டு மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

ஒரு காலத்தில் புகழ்மிக்கதாக இருந்த சென்னைப் புகழை மெல்ல இழந்து வருகிறது என்று சொல்லி இருக்கிறீர்கள். தருமமிகு சென்னை புகழின் உச்சியில் இருந்து வருகிறது. அதன் மவுசு கூடிக் கொண்டே போகிறது. தெலுங்கை தாய்மொழியாகக் கொண்ட நடிகர்கள், பாடகர்கள், இசை அமைப்பாளர்கள், தயாரிப்பாளர்கள் எல்லாம் வளர்ந்த சென்னை இது! வளர்த்த சென்னை இது! ஆந்திரா பிரிவினைக்குப் பிறகு மெல்ல ஹைதராபாத்துக்கு அவர்கள் எல்லாம் சென்று விட்டார்கள். இதுவெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

தென்னிந்தியாவுக்கே முதல் பல்கலைக் கழகம் சென்னையில்தான் இருந்தது. ‘எல்லாரும்’ இங்கேதான் படித்தார்கள். அந்தச் சென்னையின் புகழ் இப்போது குறைந்துவிட்டதாக நீங்கள் சொல்கிறீர்கள். பரப்புரைக்கு வந்த உங்களுக்கு வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்க்கத் தெரியவில்லை. நாயுடுகாருவே நீங்கள் மகாபாரதத்து சல்லியன் போல ஆகிவிட்டீர்கள். இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்லப்போவதில்லை. சென்னை, ஹைதராபாத், பெங்களூர் மாதிரிதான் பரந்தூர் இங்கே தயாராகிக் கொண்டு இருக்கிறது. நீங்கள், அமராவதியில் மூழ்கி இருக்கிறீர்கள். சென்னையைப் பற்றி நாங்கள் கவலைப்படாமலா வளர்ந்து இருக்கிறது. சென்னை உங்களின் தொழில் சாம்ராஜ்யத்தின் சந்தையாக இருக்கிறதே, அது உங்களுக்கு இப்போது புகழ்மிக்கதாக இருக்குமே.

சென்னையிலிருந்து அமெரிக்காவுக்குச் செல்கிறார்கள் என்றால் அவர்களின் மதி நுட்பம், ஆனால் அதே நேரத்தில் தொழில் நுட்பத்திலும் தொழிற்சாலைகளிலும் சென்னை பெரு வளர்ச்சி பெற்று இருக்கிறது. சென்னையும் அதன் புறநகரும் எவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் மோடி அரசில் சிக்கிக் கொண்டு பயன்களைப் பெறத் தொடங்கி விட்டீர்கள் எனும் போது மோடியின் 12 ஆண்டு ஆட்சி - சாதனை ஆட்சியாகத்தான் உங்களுக்குத் தெரியும். ஏன் அவர் கிருஷ்ணராகவும் உங்களுக்குத் தெரிவார்.

நாயுடுகாரு. நீங்கள் திராவிடன் என்று பத்திரிகையாளரின் பேட்டியின் போது மிகப் பெருமிதமாகக் கூறியிருந்தீர்கள். அதோடு தமிழ்நாடு திராவிட நாகரிகத்தின் மய்யம் என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். நீதிக்கட்சியின் உண்மையான பெயர் ‘South Indian Liberal



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்

Federation’ (தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்) அப்போது ஆந்திரர்கள் ‘திராவிட’ எனும் சொல்லை எதிர்த்தார்கள். அந்தச் சொல்லைப் போட்டு அரசியல் தொடங்கியிருந்தால் தென்னிந்தியாவின் நிலையே வேறுமாதிரி ஆகியிருக்கும். இன்று நீங்கள் ‘திராவிடன்’ என்று சொன்னதை வரலாற்றோடு இணைத்துப் பார்க்க வேண்டியவனாக இருக்கிறேன். அவ்வளவுதான்.

**திராவிடராக இருந்துகொண்டு ஆரிய அடிவருடிகளின் சகவாசம் உங்களுக்கு ஏன், நாயுடு அவர்களே. உங்கள் சுயநலம்தான்! எனக்குப் புரிந்துவிட்டது. என்ன செய்யலாம், காலந்தோறும் தென்னிந்தியாவுக்கு இப்படி ஒரு பின்னடைவு ஏதாவது ஒரு வகையில் வந்து நேருகிறது. திராவிட நாகரிகமும், திராவிடனும் இல்லாமல் ஆகிவிடுகிறது.**

தமிழ்நாட்டில் உள்ள தெலுங்கர்கள் பற்றி கூறி இருக்கிறீர்கள். நீங்கள் அரசியல் களத்தில் புகுவதற்கு முன்பே அவர்கள் குடும்பம் குடும்பமாகத் தமிழை அறிந்து உணர்ந்து தமிழராக வாழ்பவர்கள். கிறிஸ்தவமும் இஸ்லாமும் தமிழுக்கு தமிழர்களுக்குப் பங்களிப்பு அளித்ததைப் போல தெலுங்கு பேசுபவர்கள் தமிழோடு இணைந்து தமிழராகிப் போன தனி வரலாறு பற்றி ஒரு நூலே எழுதலாம். ரெட்டியார்களும் நாயுடுகாருகளும் நிரம்பப்பேர் இருக்கிறார்கள். ஒரு பட்டியலே தயாரிக்கலாம். இவர்களுள் திராவிட இயக்கத்திற்கு என்று சிறப்பாக பாடுபட்டவர்கள் உண்டு. இப்போதும் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் தமிழராகவே ஆகி வளர்ச்சியை நோக்கி விரைந்து கொண்டு இருக்கின்றோம்.

சோமலெ, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார். அதில் ஓர் இடத்தில் ஓமந்தூரார், ‘என்னுடைய தாயார் தமிழும் தெலுங்கும் கலந்துதான் பேசுவார். தனித் தெலுங்கு பேசுவதில்லை. நாங்கள் எல்லாம் தமிழ்தான் பேசுகின்றோம்’ என்று குறிப்பிட்டு இருக்கிறார். இவர்களெல்லாம் தமிழராகிப் போனவர்கள் இல்லையா?

அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து பாடினார். உவமைக் கவிஞர் சுரதா ‘அமுதம் தேனும் எதற்கு?’ என்று பாடல் புனைந்தார். உடுமலை நாராயணகவி ‘கன்னித்தமிழ் சாலையோரம்’ எனும் பாடலை இயற்றினார். பி.சுசீலா பாரதிதாசனின் ‘தமிழுக்கு அமுது என்று பேர்’ எனும் பாடலை இசைத்தார். தமிழும் தெலுங்குமாய் கைகோத்து இருப்பதை காலக் கண்ணாடிக் காட்டுகிறதே.

திருமலையில் நாள்தோறும் பாடும் சுப்ரபாதம் எழுதியவர் அன்னமாச்சாரியார். அதைப் பாடியவர் எம்.எஸ். அன்னமாச்சாரியார் நாலாயிரத்திற்கு உரை எழுதியிருக்கிறார். வரதராஜுலு நாயுடு ‘தமிழ்நாடு’ எனும் பெயரில் நாளேட்டை நடத்தியவர். அதில் பணியாற்றியவர் என்.டி. சுந்தரவடிவேலு. அதிசய மனிதராய் வாழ்ந்தவர் ஜி.டி.நாயுடு. இந்தச் சால்பும் சான்றாண்மையும் தமிழும் தெலுங்கும் அல்லவோ?

பெரியார், ‘எனக்குத் தாய்மொழி கன்னடம். தெலுங்கு நன்றாகப் பேசுவேன். எனக்குப் படிக்க எழுத தமிழ் மட்டுமே தெரியும். ஆந்திர நாட்டில் பேசிய தமிழ் தெலுங்கு, கர்நாடகத்தில் பேசிய தமிழ் கன்னடம், கேரளத்தில் பேசிய தமிழ் மலையாளம்’ என்றார். இப்படி அவர் பேசியதற்கு தென்னிந்திய மொழிகளுக்கிடையே உள்ள உறவுதான் காரணம். எடுத்துக்காட்டு:வீடு என்பதற்கு - இல்லம் (தமிழ்) இல்லு (தெலுங்கு) வீடு (மலையாளம்) மனெ (கன்னடம்) இதனால்தான் பெரியார் அப்படிச் சொன்னார்.

அறிஞர் அண்ணா, அவரது தாயார் பங்காரு அம்மாள், சிற்றன்னையார் இராஜாமணி அம்மையார், அண்ணாவின் சகோதரி நாகரத்தினம் அம்மாள், இவர்களுடைய மகள் சௌந்திரா அம்மாள் ஆகியோர் சரளமாகத் தெலுங்குப் பேசக் கூடியவர்கள். அண்ணியார் ராணி அம்மாள், பரிமளம் போன்றவர்களுக்குத் தெலுங்குப் பேசத் தெரியாது. இதனை அண்ணியார் ராணி அம்மாவே எழுதியிருக்கிறார். தமிழ்நாட்டில் தெலுங்கு அப்படி ஒரு சமூகத் தேவையாகி விட்டது. நாயுடு அவர்களே. ஆகவே வளர்ச்சி நிலையில் தெலுங்கர் என மறந்து அவர்கள் எங்களோடு தமிழராகிப் போனார்கள்.

இன்னும் ஒன்றையும் சொல்கிறேன். திராவிட இயக்கத்தின் விடிவெள்ளி டாக்டர் சி.நடேசனார் தெலுங்கைத்தான் ஆரம்பப் பள்ளியில் சேர்ந்து இறுதிவரை படித்தார். பிறகுதான் தமிழைக் கற்றார். அப்படியொரு கால நிலை அது. ஆகவே வளர்ச்சி நிலையில் நாங்கள் தமிழராய் இருக்கின்றோம் நாயுடு அவர்களே.

நடிகமணி டி.வி.நாராயணசாமி, நடிகவேள் எம்.ஆர். ராதா, பட்டுக் கோட்டை அழகர்சாமி, ஏ.பி.ஜனார்த்தனம், சி.பி.சிற்றரசு, கே.ஜி.இராதாமணாளன் என இப்படி எழுத்திலும் பொது வாழ்க்கையிலும் கலை உலகிலும் இன்னும் பலர் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டு தமிழராய் ஆனார்கள் - தமிழராகிப் போனார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுக்கு தமிழ்நாடு பற்றிய வளர்ச்சிதான் மேலோங்கி நிற்கிறது. இப்படிப் பல சாதனையாளர்கள் இருக்கிறார்கள். ஒரு கட்டுரையில் அத்தனை பெயரையும் சொல்லிவிட முடியாது. ‘எந்தரோ மகானுபாவலு அந்தரக்கி வந்தனம்’ சேஸ்தானு.

தென்னிந்தியாவின் மொழிகள் எல்லாம் சமஸ்கிருத கலப்பால் தனி தேசியத்தன்மை பெற்றுவிட்டன. தமிழ்தேசம், (நாடு) தெலுங்குதேசம், கர்நாடகம், கேரளம் என இன்று ஆகிவிட்டன. இந்திய ஒன்றியத்தில் இணைந்து இருக்கின்றோம். அவ்வற்றிக்குரிய உரிமைகளை நாம் கோரி நிற்கின்றோம். ஒன்றியம் அதனை வழங்கினால் தானே முன்னேறிச் செல்ல முடியும். நீங்கள் இந்தியப் பகுதிகள் என்று சொல்வதைப் பார்த்தால் இந்தியாவை ஒப்புக் கொள்ளாமல் தி.மு.க. மறுத்தது போல் நீங்கள் கூறுவது சரியில்லை.

டபுள் எஞ்சின் வளர்ச்சிப் பற்றி பேசி இருக்கிறீர்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி தமிழ்நாடு அடையவில்லை என்று பேசி இருக்கிறீர்கள். இதற்குப் பதிலைத் தீக்கதிர் நாளேடு (22.04.2026) உங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கிறது. அதனைக் கீழே தருகிறேன். படித்துப் பாருங்கள்.

| வளர்ச்சிப் பிரிவு | தமிழ்நாடு | மகாராஷ்டிரா | உத்தரப்பிரதேசம் | குஜராத் |
|---|---|---|---|---|
| ஜி.டி.பி.மதிப்பு/ரூ. | 31லட்சம் கோடி | 45லட்சம்கோடி | 29 லட்சம் கோடி | 28 லட்சம் கோடி |
| ஜி.டி.பி.வளர்ச்சி | 11.9% | 7.27% | 8.99% | 8.4% |
| சிறப்பு பொருளாதார மண்டலங்கள் | 58 | 41 | 23 | 27 |
| தொழிற்சாலைகள் | 39,512 | 26,350 | 17,481 | 29,766 |
| காப்புரிமை விண்ணப்பங்கள் | 15,347 | 7,8065 | 5,695 | 2,732 |
| தொழில் உற்பத்தி மதிப்பு | ரூ9,65,003 கோடி | 9,50,569 கோடி | 7,34,898 கோடி | 9,78,899 கோடி |
| தனிநபர் ஜி.டி.பி. சராசரி/ரூ | 3,53,483 | 3,61,308 | 1,07,468 | 3,71,016 |
| மாநில வருவாயில் சொந்த வரி வருவாய் | 75.31% | 74.98% | 72.38% | 48.23% |

இவையெல்லாம் பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சி தொடர்புடையது இதே போல சமூகக் குறியீடுகளையும் ஒப்பிட்டு பார்ப்போம்.

| சமூக பிரிவு | தமிழ்நாடு | மகாராஷ்டிரா | உத்தரப்பிரதேசம் | குஜராத் |
|---|---|---|---|---|
| சமூக முன்னேற்ற குறியீடு2022 | 63.32 | 50.82 | 49.16 | 52.81 |
| வறுமை 2023 | 1.43 % | 5.48% | 17.40% | 9.03% |
| பிறந்த சிசு இறப்பு 1000க்கு(2023) | 12 | 14 | 37 | 20 |
| பிரசவிக்கும் தாய்மார் இறப்பு 1,00,000க்கு (2023) | 35 | 36 | 141 | 51 |
| உயர் கல்வி மாணவர் சேர்க்கை | 49% | 35.3% | 27% | 23% |
| தலித் மக்கள் மீது தாக்குதல் வழக்குகள் ஒரு இலட்சம் பேருக்கு | 8.8 | 19.4 | 30.7 | 32.5 |
| பெண்கள் மீதான தாக்குதல் வழக்குகள் ஒரு இலட்சம் பேருக்கு | 23.2 | 76.8 | 59 | 23.1 |

**சமூகக் குறியீடுகளில் தமிழ்நாட்டுக்கு முன்பாக இருப்பது கேரளா மட்டும்தான், மற்ற எல்லா மாநிலங்களும் தமிழ்நாட்டுக்குப் பின்னர்தான் உள்ளன, தொழில் வளர்ச்சியுள்ள மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களும் யோகி ஆட்சி புரியும் உ.பி. மட்டும்தான் ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன, பீகார்/மத்தியப்பிரதேசம் போன்ற இரட்டை எஞ்சின் சர்க்கார்களை ஒப்பிட்டால் இன்னும் நிலைமை பா.ஜ.க.வுக்கு மோசமாக இருக்கும்.**

**தன் மாநிலத்தில் ஆட்சியைத் தக்க வைக்கவும் பதவி ஆசையிலும் சந்திரபாபு நாயுடு சங்கிகளைப் போல பொய்த் தரவுகளை முன் வைக்கிறார், தொகுதி மறுவரையறையில் ஆந்திரா உட்பட தென் மாநிலங்களுக்குத் தொகுதிகள் குறைகின்றன என்பதைக் கூட தன் மாநில மக்களிடம் மறைத்து மோடி ஆதரவு புராணம் பாடத் துணிந்து விட்ட சந்திரபாபு நாயுடு, இரட்டை எஞ்சின் பொய்களைக் கூறுவதில் என்ன ஆச்சர்யம் உள்ளது? தமிழக மக்கள் பா.ஜ.க.வின் திறமையற்ற ஆட்சி முறைகளை நன்கு அறிந்து வைத்துள்ளனர், எனவே சங்கியாகவே மாறிப்போன சந்திரபாபு நாயுடுவின் பொய்கள் தமிழ்நாட்டில் எடுபடாது.**

நாயுடு அவர்களே, உங்களுக்குத் தென்னிந்திய மாநிலங்களின் மீது உண்மையிலேயே பிடிப்பு இருக்கிறது. பேட்டியின் போது பெருமிதத்தோடு தங்களைத் ‘திராவிடன்’ என்று பிரகடனப்படுத்திக் கொண்டு இருக்கிறீர்கள். எம்.ஜி.ஆர். தென்னிந்திய முதல்வர்கள் மாநாட்டை 1983இல் பெங்களூரில் கூட்டினார். 1989இல் வள்ளுவர் கோட்டத்தில் கலைஞர் முதல்வர் பொறுப்பு ஏற்றுக் கொண்டபோது ஒன்றுபட்ட ஆந்திராவின் முதல்வராக என்.டி.ஆர். வந்திருந்தார். தேவையான போது எல்லாம் அவர் தென்னகத்தின் ஒற்றுமைக்கும் சாதனைகள் நிகழ்த்துவதற்கு துணையாக இருந்தார். எங்கள் முதல்வர் ஸ்டாலினும் தென்னிந்தியாவின் ஒற்றுமையை வலியுறுத்தியே பேசி வருகிறார்.

**நீங்கள் தி.மு.க.வை எவ்வளவு வேண்டுமானாலும் விமர்சனம் செய்யுங்கள். நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு மசோதா தோல்வி அடைய நீங்களும் உதவி இருந்தால் நன்றாக இருந்திருக்கக்கூடும். இப்படிப்பட்ட சேவை செய்ய வாய்ப்புக் கிடைத்து இருக்கும் என்பதனால் ‘தொருக்குனா இட்வன்டி சேவா’ என்று இக்கடிதத்திற்குத் தலைப்பிட்டு இருக்கின்றோம்.**

**தென்னகத்திற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி ஒன்றும் செய்யாது. நீங்கள் அந்த அணியிலிருந்து வெளியேறி விடுங்கள். ஒன்றியத்தில் ஒரு புதிய அரசை உருவாக்குவோம். மோடி - அமித்ஷா கூட்டணி ஆரிய வர்த்தத்தை ஸ்தாபிக்க வந்த அணி. நீங்களோ ‘திராவிடன்’ என்கிறீர். அதைக் காப்பாற்றவும் ‘தொருக்குனா இட்வன்டி சேவா’ என்பதை மனத்தில் இருத்தியும் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து - மோடி அணியிலிருந்து விலகி விடுங்கள். இதை செய்ய முன் வாருங்கள். தி.மு.க.வை விமர்சனம் செய்து பயன் இல்லை.**

**இப்படிக்கு**
**ஓர் ‘அரைகுறை’ பாமரன்.**